
ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; லஞ்சம் இல்லாத தமிழ்நாடு என்று சொல்லி, முதலமைச்சர் விஜய்யை அளவுக்கு மீறி பாராட்டி, ஒரு பத்திரிகை தலையங்கம் எழுதி உள்ளதாமே?

போண்டி : **ஆமாய்யா; அந்தப் பத்திரிகையின் டி.வி.யிலேயே, தலையங்கம் வந்த அதே நாளில், முதலமைச்சரின் தொகுதியான பெரம்பூர் உள்ளிட்ட 14 சார் பதிவாளர் அலுவலகங்களில் சோதனை செய்ததில் கணக்கில் வராத ரூ.18 லட்சம் ரொக்கம், ரூ.20 லட்சம் ஜி.பே. மூலம் டிரான்சர் கண்டு பிடிச்சிருக்காங்க. இப்ப என்ன சொல்ற. இதுதான் லஞ்சம் இல்லாத ஆட்சியா?**

பண்டிகையையொட்டி – சிவகங்கை மாவட்டத்தில்

பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய ஊக்கத்தொகை வழங்குக!

மாவட்ட ஆட்சியரிடம் த.சேங்கைமாறன் மனு!

சிவகங்கை, நவ. 5- சிவகங்கை மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு ஆவின் நிர்வாகம் உரிய தீபாவளி ஊக்கத் தொகை வழங்க உத்திரவிடுமாறு த.சேங்கைமாறன் கலெக்டரிடம் மனு அளித்தார். இதுகுறித்து சிவகங்கை மாவட்ட கழக துணைச் செயலாளர் ,திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர், முன்னாள் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க தலைவர் த.சேங்கைமாறன் கலெக்டர் ப.ஆகாஷிடம் கொடுத்துள்ள மனுவில் கூறிஉள்ளதாவது. சிவகங்கை ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆவின் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் சார்பில் தினசரி சுமார் 60ஆயிரம் லிட்டர் பால் ஆவின் நிர்வாகத்திற்கு வழங்கி வருகிறார்கள். இம் மாவட்டத்தில் பெரும்பாலும் கிராமப்புற பகுதியில் அதிக அளவில் பால் வழங்கப்பட்டு வருகிறது. பால் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி பண்டிகையின் போது ரூபாய் 1.20பைசா, ஆவின் நிர்வாகம் ரூபாய் 1.60பைசா ஆக மொத்தம் ரூபாய் 2.80 பைசா ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு 2025ல் இதே தொகை வழங்கப்பட்டது. இவ்வாறு பண்டிகை முன்பாக வழங்கப்படும் ஊக்கத் தொகை ரூபாய் ஒரு நபருக்கு ரூபாய் 5000 முதல் ஒரு லட்சம் வரை ஊக்கத் தொகை பெறுவார்கள். இதனால் கிராமப் புறங்களில் பால் உற்பத்தியாளர் கள் குடும்பத்துடன் மகிழ்ச்சியுடன் தீபாவளி கொண்டாடி வந்தார்கள். இந்த ஆண்டு சங்கத்தின் சார்பில் ரூபாய் 1 20ம், ஆவின் நிர்வாகம் சார்பில் 70பைசா ஆக மொத்தம் ரூபாய் 1.90மட்டும் வழங்கப்படுகிறது. இது பால் உற்பத்தியாளர்களுக்கு பேரிடியாக உள்ளது. இந்த ஆண்டு த.வெ.க.அரசிடம் கூடுதலாக ஊக்கத் தொகை கேட்டு கோரிக்கை வைத்து வந்த நிலையில் ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த பணத் தில்90பைசா குறைத்து வழங்கப்படும் என்று ஆவின் நிர்வாகம் கூறியுள்ளது குறித்து அதிர்ச்சியில் உள்ளார் கள். கூடுதலாக தொகை வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்த நிலையில் ஊக்கத் தொகை குறைக்கப்பட்டது ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது . எனவே பால் உற்பத்தியாளர்களுக்கு கூடுதல் தொகை வழங்கப்படவிட்டாலும், ஏற்கனவே சென்ற ஆண்டு வளர்க்கப்பட்ட ரூபாய் 2.80 வழங்க வேண்டும் என்றும் அதற்குரிய நடவடிக்கையினை மாவட்ட நிர்வாகம் மாவட்ட கூட்டுறவு பதிவாளருக்கு உத்திரவிட வேண்டும். இவ்வாறு திருப்புவனம் பேரூராட்சி தலைவர் த.சேங்கைமாறன் மனுவில் கூறியுள்ளார். இது குறித்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவு துறை அதிகாரிகளுடன் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாக கலெக்டர் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் –

கழக முன்னோடி சக்திவேலனுக்கு கண் அறுவை சிகிச்சை

முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் நலம் விசாரித்தார்!

விழுப்புரம், நவ.5- விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்ட மன்றத் தொகுதி அனந்தபுரம்பேரூராட்சியில்உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அருகில்வசிப்பவர் கழக முன்னோடி சக்திவேல்.இவர் சில தினங்களுக்கு முன்பு கண் அறுவை சிகிச்சை செய்து தற்போது வீட்டில் சிகிச்சை பெற்று வருகிறார்.இது குறித்து தகவல் அறிந்த விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கண் அறுவை சிகிச்சை மேற்கொண்டு வீட்டில் சிகிச்சை பெற்று வரும் சக்திவேலின் வீட்டிற்கு நேரில் சென்றுஅவரிடம் கண் அறுவை சிகிச்சை குறித்து கேட்டறிந்து உடல் நலம் குறித்து நலம் விசாரித்தார். தொடர்ந்து மருத்துவரின் ஆலோசனைப்படி கண்ணையும், உடல் நலத்தை யும் கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும் என அவர் அறிவுறுத்தினார். இதில் செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர், முன்னாள் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜய குமார், அனந்தபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் முருகன், அனந்தபுரம் நகர செயலாளர் சம்பத், அனந்தபுரம் நகர அவைத் தலைவர் டாக்டர் கல்யாண் குமார், பொருளாளர் பாபு ஐயர், மாவட்ட பிரதிநிதிகள் அய்யாதுரை , அண்ணாமலை, அறிவழகன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் குமார், செல்வமணி, நிர்வாகிகள் மணிமாறன், நேரு, பொய்யா மொழி, கிருஷ்ணமூர்த்தி, செஞ்சிகிழக்கு ஒன்றிய பொருளாளர் இக்பால், கோவிந்தன், துத்திப்பட்டு குமரவேல் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

ஒன்றிய அரசிடம் சரண்! உள்ளாட்சி அமைப்புகளிடம் முரண்! இதுதான் த.வெ.க. அரசின் நிர்வாகம்!

வடகிழக்கு பருவமழையை தமிழ்நாடு எதிர்கொண்டு வருகிறது. கடலோர மாவட்டங்கள் மழையினால் பாதிப்படைவது வழக்கம். தமிழ்நாட்டின் தலைநகர் சென்னை கடலோரத்தில் இருப்பதாலும், மாநகரத்தின் சில பகுதிகள் கடல் மட்டத்தைவிட கீழே இருப்பதாலும் மழை நீர் பாதிப்பு தொடர்கிறது.

இந்தப் பாதிப்புகளிலிருந்து மக்களை மீட்பதற்காகக் கடந்த திராவிட மாடல் ஆட்சியில் மழைநீர் வடிகால் பணிகள் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டு, தண்ணீர் தேங்காத நிலையும், ஒரு சில இடங்களில் தண்ணீர் தேங்கினால் உடனே அகற்றப்படக்கூடிய வசதிகளும் உருவாக்கப்பட்டன. மழை நீர் வடிகால் கட்டமைப்புகளை பல துறைகள் சேர்ந்து மேற்கொண்டாலும், மழை நேரத்தில் மக்களைப்பாதுகாக்கின்றபணியில்முதன்மையாக இருப்பது உள்ளாட்சி அமைப்புகள்தான். சென்னையில் மட்டுமின்றி தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மாநகராட்சி நகராட்சி பேரூராட்சி ஊராட்சி ஒன்றியம் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளே மழைக் காலத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்காத வகையில் செயல்படக்கூடியவை.

த.வெ.க அரசு அமைந்ததிலிருந்து உள்ளாட்சி அமைப்புகள் முடங்கிக் கிடக்கின்றன. உள்ளாட்சி அமைப்புகளில் பதவியில் உள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் அதிகாரங்களை முடக்கி, அவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகளுக்கான நிதியைத் தடுத்து வைத்து, அதிகாரிகளைக் கொண்டு நிர்வாகத்தை நடத்தும் ஜனநாயக விரோதப் போக்கை விஜய் அரசு மேற்கொண்டு வருகிறது. இதில், தமிழ்நாட்டு மக்கள் அனைவருடைய கண்ணுக்கும் தெரிந்த உதாரணமாக சென்னை மாநகராட்சியின் நிர்வாகம் அமைந்துள்ளது.

தலைநகர் சென்னையின் மாநகராட்சி கடந்த திராவிட மாடல் ஆட்சியில் முதன் முதலாக பெண் மேயரைக் கொண்ட மாநகராட்சியாகவும், அதிலும் பட்டியல் இனத்தைச் சேர்ந்த பெண் மேயருக்கான மாநகராட்சியாகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்படி, சென்னை மாநகராட்சியின் முதல் பட்டியல் இனப் பெண் மேயராக பிரியா அவர்கள் பொறுப்பேற்றார். ஒவ்வொரு பருவமழைக் காலத்திலும் மாநகராட்சி அலுவலர்கள், தூய்மைப் பணியாளர்கள் ஆகியோருடன் மேயர் பிரியாவும் களத்தில் நின்று இரவு பகல் பாராமல் பணியாற்றியதை ஊடகங்கள் வாயிலாக அனைவரும் அறிவார்கள்.

தமிழ்நாட்டின் பெரும்பாலான உள்ளாட்சி அமைப்புகளிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர்கள், சேர்மன்கள், கவுன்சிலர்கள் இதே போன்று பணியாற்றினர். நகர்ப்புற உள்ளாட்சிகளில் 50% பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்கிய திராவிட மாடல் ஆட்சியினால், மக்கள் பிரதிநிதிகளாகப் பல்வேறு பொறுப்புகளில் இருந்தவர்களில் பெண்களே அதிகம். அவர்கள் தங்கள் பணிகளைக் கவனித்து வந்த நிலையில், த.வெ.க ஆட்சி அமைந்தது முதல் உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் அதிகாரங்களைப் பறிக்கும் வேலைகள் தொடங்கிவிட்டன.

சென்னை மாநகராட்சி சார்பில் நிறைவேற்றப்பட்ட ஒரு பணியைத் தொடங்கி வைக்கும் நிகழ்வில் ரிப்பன் வெட்டுவதற்காக மேயர் பிரியா கத்தரிக்கோலை எடுத்த போது, த.வெ.க.வைச் சேர்ந்த பெண் எம்.எல்.ஏ ஒருவர் தன் வீட்டிலிருந்து கொண்டு வந்திருந்த கத்தரிக்கோலை குறுக்கே விட்டு, ரிப்பனை வெட்டியதை நேரலையில் பார்த்தவர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள். ரிப்பன் வெட்டுவது, குத்துவிளக்கு ஏற்றுவது என்று மாநகராட்சிப் பணிகளின் தொடக்க நிகழ்வுகள் எதுவாக இருந்தாலும் சென்னை மேயர் உள்பட தமிழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் அதிகாரத்திற்குப் போட்டியாக த.வெ.க அரசின் எம்.எல்.ஏ.க்களும் அதிகாரிகளும் செயல்படுவது வழக்கமாகிவிட்டது.

சேலம் மாநகராட்சி பள்ளி ஒன்றில் வகுப்பறைகள் கட்டுவதற்கானப் பணிகள் 2024 டிசம்பர் மாதம் தொடங்கியது. பணிகள் நிறைவடையும் கட்டத்தை அடைந்தபோது ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது. மாநகராட்சி ஆணையராக இருக்கும் அதிகாரி, வகுப்பறைகளைத் திறக்கும் நாள் பற்றியோ, விழா ஏற்பாடுகள் பற்றியோ சேலம் மேயர் இராமச்சந்திரனுக்கோ கவுன்சிலர்களுக்கோ தகவல் தெரிவிக்கவில்லை. த.வெ.க அமைச்சர் தமிழன் பார்த்திபனை முன்னிறுத்தி விழா நடத்தப்பட்டது.

இது குறித்து சேலம் கவுன்சிலர் நேரடியாகவே மாநகராட்சி ஆணையரிடமும் த.வெ.க அமைச்சரிடமும் மாநகராட்சிப் பள்ளியில் உள்ள கட்டடத்தைத் திறக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளை சுட்டிக் காட்டி, எதற்காக மேயரை அழைக்கவில்லை என்று கேட்டார். த.வெ.க.காரர் போலவே செயல்படும் மாநகராட்சி ஆணையரால் பதில் சொல்ல முடியவில்லை. மக்கள் பிரதிநிதிகளுக்குரிய மரியாதையை வழங்க மறுக்கும் ஆணையரை அமைச்சர் முன்னிலை யிலேயே வறுத்தெடுத்தார் கவுன்சிலர்.

தமிழ்நாட்டில் பருவமழை நீடிக்கின்ற நிலையில், மேயர்கள் மற்றும் சேர்மன்கள் ஆய்வுப்பணிக்கு அழைத்தால் கமிஷனர்கள் உள்ளிட்ட அதிகாரிகளும் அலுவலர்களும் வருவதில்லை. ஆலோசனைக் கூட்டங்களிலும் பங்கேற்பதில்லை. அமைச்சர் முன்னெடுக்கும் ஆலோசனைகளில் பங்கேற்கும் உள்ளாட்சித் துறை அதிகாரிகள் அந்தக் கூட்டங்களுக்கு மேயர்கள், சேர்மன்கள், கவுன்சிலர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு முறையாக அழைப்பு அனுப்புவதில்லை. மக்கள் நலன் கருதி அவர்களாகப் பங்கேற்க முன்வந்தாலும் அவமானப்படுத்தி அனுப்புவதை ஒரு பழக்கமாகவே கைக்கொள்கிறார்கள்.



கோவி.லெனின்
தி.மு.க .தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

தலைநகர் சென்னையில் மாநகராட்சி ஆணையராக இருப்பவர் சமீரன் ஐ.ஏ.எஸ். ஆவார். இவருக்கு நல்ல அனுபவம் உண்டு. உள்ளாட்சி நிர்வாக வரைமுறைகளும் அறிந்தவர். ஆனால், திட்டமிட்டே மேயரையும் கவுன்சிலர்களையும் புறக்கணிக்கும் வழக்கத்தை மேலிட உத்தரவின்படி நிறைவேற்றி வருகிறார். முதலமைச்சர் விஜய்யின் பெரம்பூர் தொகுதி மழை நீரால் பாதிக்கப்பட்ட நிலையில், விஜய்யோ அவரது கட்சி நிர்வாகிகளோ எட்டிக் கூடப் பார்க்கவில்லை. மேயர் என்ற முறையில் தனக்குள்ள அதிகாரத்தையும் பொறுப்பையும் உணர்ந்து பிரியா, பெரம்பூர் தொகுதியில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று ஆய்வு மேற்கொண்டார். மேயர் ஆய்வு செய்யும் இடத்தில் இருக்கவேண்டிய ஆணையர் வரவில்லை.

கவுன்சிலர்கள் பலரும் மழை நீர் சூழ்ந்த பகுதிகளில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்காத வகையில் உடனடி நடவடிக்கையை மேற்கொள்வதற்காக களத்தில் நின்று பணியாற்றினர். அதிகாரிகளிடமிருந்து போதுமான ஒத்துழைப்பு கிடைக்காத நிலையிலும், மனிதநேயமிக்க தூய்மைப் பணியாளர்களின் துணையுடன் தொடர்ந்து வேலை செய்தனர்.

தி.மு.க.வைச் சேர்ந்த கவுன்சிலர்கள் தாங்கள் செய்ய வேண்டிய கடமையைச் செய்து கொண்டிருந்தபோது, த.வெ.க.வின் எம்.எல்.ஏக்களும் நிர்வாகிகளும் ஸ்பாட்டில் நின்று ரீல்ஸ் போட்டுக் கொண்டிருந்தனர். நீர்வளத் துறை அமைச்சராக இருக்கும் த.வெ.க.வின் புஸ்ஸி ஆனந்த் எலக்ட்ரிக் ரம்பத்தால் மரம் அறுப்பது போல ரீல்ஸ் எடுத்து வெளியிட்டது உச்சக்கட்ட அவலம்.

உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக தமிழ் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வந்த சாலைப் பணிகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. பாதாள சாக்கடைப் பணிகள் அம்போவென நிற்கின்றன. நகராட்சிகள் சார்பில் கட்டப்பட்டு வந்த பாலங்கள், கட்டடங்கள் உள்ளிட்ட பலவும் இறுதிக்கட்டத்தை எட்ட முடியாதபடி அவற்றுக்கான நிதியை த.வெ.க அரசு நிறுத்திவிட்டது. **தி.மு.க.வினருக்குப் பெயர் கிடைக்கக்கூடாது என்பதும், ஒருவேளை தி.மு.கவைச் சேர்ந்த உள்ளாட்சி பிரதிநிதிகளால் நிறைவேற்றப்பட்ட திட்டமாக இருந்தால் அதில் விஜய் பெயரை ஸ்டிக்கர் ஒட்டுவதும் 5 மாத கால த.வெ.க. ஆட்சியின் செயல்பாடாக உள்ளது. சிவகங்கை த.வெ.க பெண் எம்.எல்.ஏ. அங்குள்ள ஊராட்சி ஒன்றிய ஒப்பந்தத்தாரர்களிடம் ஒவ்வொரு பணிக்கும் இலஞ்சப் பணம் கேட்பது குறித்து புகார் வெளியாகியுள்ளது.**

ஜனநாயகத்தின் நாடிநரம்புகளாக இருப்பவை உள்ளாட்சி அமைப்புகள். அவை அதிகாரபலத்துடன் சுதந்திரமாக செயல்படும் போதுதான் மக்களின் அன்றாட அடிப்படை வசதிகள் நிறைவேறும். இல்லையென்றால், தெருவில் தேங்கும் குப்பையை அள்ளுவதும், இரவில் மின்விளக்குகளைப் பாராமரிப்பதும் கூட சிக்கலாகிவிடும். விஜய் தலைமையிலான த.வெ.க ஆட்சியில் உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பிரதிநிதிகளுடன் அதிகாரிகள் முரண்பட்டு நிற்கிறார்கள். ஆட்சி மேலிடத்தின் உத்தரவுக்குப் பணிந்து, உள்ளாட்சி அதிகாரத்தை முடக்கிப் போடுகிறார்கள்.

உண்மையான ஜனநாயகத்திற்கான அளவுகோல் உள்ளாட்சிகளுக்கு அதிகாரப் பரவலை வழங்கி, ஒன்றியத்தில் குவிந்துகிடக்கும் அதிகாரங்களை மாநிலங்களுடன் பங்கிட்டுக் கொள்வதுதான். ஆனால், த.வெ.க. ஆட்சியில் இது தலைகீழாகிவிட்டது. ஒன்றிய அரசின் அதிகாரத்திடம் த.வெ.க சரண் அடைந்து கிடக்கிறது. உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரத்தைப் பறித்துக் கொண்டிருக்கிறது.

மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமிப்பதற்கான தேர்வுக் குழுவில், பல்கலைக்கழக மானியக் குழுவின் (யு.ஜி.சி) சார்பில் ஒருவரை நியமிக்க வேண்டும் என்கிற ஒன்றிய அரசின் நிர்பந்தத்திற்கு திராவிட மாடல் அரசு பணியாமல் இருந்தது. த.வெ.க ஆட்சி வந்தவுடன், ஒன்றிய அரசுக்குப் பணிந்து, யு.ஜி.சி. உறுப்பினரைத் தேர்வுக் குழுவில் சேர்க்க ஒப்புக் கொண்டுவிட்டது. இதனால், தேர்வுக்குழுவில் ஆளுநர் மற்றும் ஒன்றிய அரசின் பிரதிநிதிகளே அதிகளவில் இடம்பெறுவர். மாநில அரசின் பிரதிநித்துவம் பின்தங்கிவிடும். துணைவேந்தர் தேர்விலும் மாநில அரசுக்குரிய அதிகாரம் பறிபோய்விடும்.

சென்னை விமான நிலையைப் பராமரிப்பைத் தனியாருக்குத் தாரை வார்ப்பது, ஒன்றிய அரசின் பாடத்திட்டத்தின்கீழ் இயங்கும் சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக்கு அதிகளவில் அனுமதி அளிப்பது, தேசிய கல்விக்கொள்கையின் அம்சங்களை நேரடியாகவோமறைமுகமாகவோ நடைமுறைப்படுத்துவது, பிரதமர் கலந்து கொள்ளும் நிகழ்வுகளில் காவி பூசிய திருவள்ளுவர் சிலையைக் காட்சிப்படுத்துவது என எல்லா வகையிலும் **தமிழ்நாடு என்ற தனித்துவமிக்க மாநிலத்தின் உரிமைகளை ஒன்றிய அரசிடம் விட்டுக்கொடுத்து வரும் முதுகெலும்பற்ற விஜய் அரசு, எளிய மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரத்தைப் பறித்து ஜனநாயகத்தை சிதைத்து வருகிறது.**



திருவள்ளூர் மேற்கு மாவட்ட கடம்பத்தூர் மத்திய ஒன்றிய கழக பொறுப்பாளர் ஏ.பிரகாஷ் ஞானஒளி தாயார் மறைந்த ஏ.ரோஸ்லின் அவர்களின் திருவுருவப்படத்தை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் நிர்வாகிகள் கே.திராவிடபக்தன், ஆர்.டி.இ.ஆதிசேஷன், கே.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், டி.மோதிலால், சிட்டிபாபு, ராஜசேகர், ஆனந்தன், கே.பி.தமிழ்ச்செல்வன், பெருமாள், சேகர், வாசு, பிரசன்னா, லிங்கேஷ், மணிகண்டன் முனுசாமி, சுப்பிரமணி, சங்கர், மோகனசுந்தரம், கிரிதரன், ஸ்ரீதர் உள்பட நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



காந்தி கிராமம் கிராமியப் பல்கலைக்கழகத்தில் குடியரசு துணைத்தலைவரிடம் மதிப்புறு முனைவர் பட்டம் பெற்ற தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரை மாநில பொதுக் குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ர வி பொன்னாடை மலர் மாலை அணிவித்து வாழ்த்துப் பெற்றார்.